செ.வெ.எண்: 71 நாள்: 28.06.2016

# <u>தமிழ்நாடு அரசு வக்பு வாரியத்திற்கு வழங்கப்படும் நிர்வாக மானியம் ரூ.1 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.</u>

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி எம்.ஆர்.திருமணமண்டபத்தில் மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவி சங்கத்தின் சார்பில் நலிவுற்ற முஸ்லீம் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.ஏ.இரத்தினசபாபதி அவர்கள் முன்னிலையில் இன்று (28.06.2016) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் மாவட்டந்தோறும் மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் அமைத்து அதன் மூலம் நலிவுற்ற முஸ்லீம் பெண்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. அதன்படி நமது மாவட்டத்தில் இன்று 321 பயனாளிகளுக்கு ரூ.18,48,000 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் ரூ.10,89,000 மதிப்பீட்டில் 198 பயனாளிகளுக்கு சிறுதொழில் கடன் உதவி தொகைகளும், ரூ.3,46,500 மதிப்பீட்டில் 62 பயனாளிகளுக்கு மருத்துவ உதவி தொகைகளும், ரூ.3,12,000 மதிப்பீட்டில் 52 பயனாளிகளுக்கு கல்வி உதவி தொகைகளும், ரூ.50000 மதிப்பீட்டில் 4 பயனாளிகளுக்கு திருமண உதவி தொகைகளும், ரூ.50,500 மதிப்பீட்டில் 5 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டது.

மேலும் தமிழகஅரசு கடந்த 5 ஆண்டுகளில் மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்களுக்கு அரசால் வழங்கப்படும் இணை மானியத்தொகை 1:1 என்பதற்கு பதிலாக 1:2 என்ற விகிதாச்சாரத்தில் உயர்த்தப்பட்டு ரூ.3.41 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு வக்பு வாரியத்திற்கு வழங்கப்படும் நிர்வாக மானியம் ரூ.45 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. தமிழ் மாநில ஹஜ் குழுவிற்கு வழங்கப்பட்டு வரும் ஆண்டு நிர்வாக மானியம் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும் நமது மாவட்டத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வுத்திட்டம் சார்பில் இயங்கி வரும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் நலிவுற்ற முஸ்லீம் பெண்களை உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு பல்வேறு நலத்திட்டங்களை பெற்று வருகின்றனர். மேற்கண்ட திட்டங்கள் மூலம் ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திலுள்ள மாற்றுத்திறனாளிகள், விதவை, ஆதரவற்ற விதவை உள்ளிட்ட 5 உறுப்பினர்களுக்கு ரூ.5000 முதல் ரூ.10000 வரை சிறுதொழில் செய்வதற்கு கடனுதவி தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழகஅரசு மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கடன் உதவித்தொகை வழங்கிட ரூ.146 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் வறுமை கோட்டிற்கு கீழுள்ள உறுப்பினர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலை வாய்ப்பும் வழங்கி வருகிறது. தமிழகஅரசு இது போன்று நலிவுற்ற முஸ்லீம் பெண்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்திட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. எனவே இத்தகைய நலத்திட்ட உதவிகளை நலிவுற்ற முஸ்லீம் பெண்கள் முறையாக பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.




புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவி சங்கத்தின் சார்பில் நடைபெற்ற நலிவுற்ற முஸ்லீம் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.ஏ.இரத்தினசபாபதி அவர்கள் முன்னிலையில் நலத்திட்ட உதவிகளை உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இரா.இரம்யாதேவி, மாவட்ட பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.செ.சிதம்பரம், வட்டாட்சியர் திரு.மணிவண்ணன், நகர கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.சிவசண்முகம், முஸ்லீம் மகளிர் உதவி சங்கத்தை சேர்ந்த கௌரவ செயலாளர் ஹாஜி.அப்துல்கரீம், கௌரவ இணைச்செயலாளர்கள்

ஹாஜி.ராஜாதாஜ்முகம்மது, ஹாஜி.டாக்டர்.ராஜாமுகம்மது, செயற்குழு உறுப்பினர்கள் திரு.சையது இப்ராஹீம், ஜனாப்.ஹாஜிமுகம்மது, ஹாஜி.முகம்மதுமைதீன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**